**சுருக்கம்**

நூற்று வீதக்கட்டணம் – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக செயல்படுத்தும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் நூற்றுவீதக் கட்டணத்தை ஒரே சீராக 5% நிர்ணயித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (குவ4) துறை

**அரசாணை (நிலை) எண்.34** **நாள்:15.02.2010**

**மாசி 3, திருவள்ளுவர் ஆண்டு 2041.**

**மீண்டும் படிக்கவும்**

1. அரசாணை (நிலை) எண். 146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை, நாள் 21.10.2005
2. அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை, நாள் 13.10.2008
3. அரசாணை (நிலை) எண். 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை, நாள் 17.9.2009

**மேலும் படிக்கவும்**

4. தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், த.நா.கு.வ. வாரியம் அவர்களின் நேர்முக கடித எண்.47990/வ.செ./அ2/ 2008 நாள் 30.3.2009 மற்றும் 8.4.2009
5. மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் அவர்களின் கடித எண். CMWSSB/Fin (CE)/283/2009, நாள் 30.4.2009
6. இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்களின் கடித எண். 40105/1999/ DO நாள் 30.4.2009
7. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடித எண். 8226/2009/B3 நாள் 3.6.2009
8. அரசு கடித எண். 9960/குவ4/2009–3, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.9.2009
9. தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், த.நா.கு.வ. வாரியம் அவர்களின் நேர்முக கடித எண்.F.68068/வ.செ/ அ1/2009 நாள் 2.12.2009

****

**ஆணை**

நகர்ப்புர உள்ளாட்சியமைப்புகளுக்காக செயல்படுத்தும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வசூலிக்கும் நூற்றுவீதக் கட்டணம் வெவ்வேறுவிதமாக உள்ளதைச் சீரமைக்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்ததற்கிணங்க, இதுகுறித்து விரிவான குறிப்புரைகளை அனுப்புமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாக இயக்குநர், மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதற்கிணங்க அவர்களது விரிவான குறிப்புரைகள் மேலே படிக்கப்பட்ட கடிதங்கள் வாயிலாக பெறப்பட்டன.

2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தற்போது வசூலிக்கும் நூற்றுவீதக் கட்டணம் கீழ்க்கண்டவாறு ஆகும்.

| வ. எண். | திட்டப் பணிகள் | நூற்றுவீதக் கட்டணம் |
|---|---|---|
| 1. | குறைந்த பட்ச தேவைக்கான ஊரக குடிநீர் விநியோகம் (RWS) மற்றும் கூட்டு குடிநீர் விநியோகம் (CWSS) | 13% |
| 2. | நகரப் பகுதிகளில் முதலீடு செய்யப்பட்ட அனைத்து கூட்டு குடிநீர் திட்டங்கள் மற்றும் தனிப்பட்ட நகர திட்டங்கள் | 18.5% |
| 3. | விரைவுபடுத்தப்பட்ட நகரக குடிநீர் விநியோக திட்டம்<br>1. மத்திய அரசின் பங்கு<br>2. தமிழக அரசு / உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | <br>3%<br>18.5% |
| 4. | தேசிய நதிநீர் பாதுகாப்பு அபிவிருத்தி திட்டம்<br>1. தேசிய நதிநீர் நடவடிக்கை குறித்த திட்டம் (5 பழைய நகரங்கள்).<br>அ. மத்திய அரசின் பங்கு<br>ஆ. தமிழக அரசின் பங்கு (நில விலை மதிப்பின் அடிப்படையில்)<br>2. தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டம் (5 புதிய நகரங்கள்)<br>அ. மத்திய அரசின் பங்கு<br>ஆ. தமிழக அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு. | <br><br>8%<br>18.5%<br><br>8%<br>18.5% |
| 5. | MPLAD திட்டம் உட்பட அனைத்து முழு வைப்புத்தொகை கொண்ட அனைத்து பணிகள் | 18.5% |
| 6. | பாதாள சாக்கடை திட்டம் | 5% |
| 7. | நூற்றுவீதக் கட்டணம் வசூலிக்கப்படாத பணிகள்<br>(அ) விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் விநியோகத் திட்டம்.<br>(ஆ) ஊரக பள்ளிகளின் விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் விநியோகத் திட்டம்<br>(இ) PMGY திட்டம்<br>(ஈ) MPLAD திட்டம்<br>(உ) விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் விநியோகத் திட்டம். (துணைத் திட்டம்)<br>(ஊ) சுவஜல்தாரா மற்றும் இதர திட்டங்கள் | கட்டணம் வசூலிக்கப்–படுவதில்லை. |

எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பணியாளர்களின் பணியமைப்பு செலவினத்தை கருத்தில் கொண்டு வாரியம் நடைமுறைப்படுத்தும் அனைத்து திட்டங்களுக்கும் ஒரே சீரான நூற்றுவீதக் கட்டணத்தை நிர்ணயம் செய்யுமாறு மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) மூலம் செய்யப்படும் பணிகளுக்கு அவ்வாரியம் வசூலிக்கும் நூற்றுவீதக் கட்டணம் மற்றும் பணிகள் குறித்த விபரங்கள் கீழ்க்கண்டவாறு என அவ்வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்:–

| வ. எண். | பணிகள் | நூற்றுவீதக் கட்டணம் |
|---|---|---|
| 1. | வாரியத்தின் நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டம் TNUDF, JBIC நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இரண்டாவது சென்னை திட்டம் மற்றும் 530 மில்லியன் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம். (மேற்பார்வைக் கட்டணம் மட்டும்) | 12.0% |
| 2. | உள்ளாட்சி நிறுவனங்கள் தவிர்த்து இதர நிறுவனத்திற்காக செயல்படுத்தப்படும் திட்டம். (மேற்பார்வைக் கட்டணம் மட்டும்) | 15.0% |
| 3. | உள்ளாட்சி அமைப்புகளுக்கான திட்டங்கள் / பணிகள். | 5.0% |
| 4. | JNNURM மூலம் வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டம். | –– |
| 5. | JNNURM மூலம் இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டம். | 5.0% |
| 6. | வாரியத்தால் மேற்கொள்ளப்படும் NRCD & CCRCP பணிகள் (மதுரை, கும்பகோணம் மற்றும் சென்னை) | 8.0% (3% திட்டம் தயாரிக்கவும் 5% மேற்பார்வை கட்டணம்) |

4. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்ளும் பணிகளுக்கு நூற்றுவீதக் கட்டணம் மட்டுமல்லாது, ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு விளம்பரம் செய்வதற்கும், இடவசதிக்காகவும், வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கும், தொழில்நுட்ப உதவி செய்வதற்கும், ஓய்வூதிய பங்களிப்பிற்கும், மதிப்பீடுகள் கூர்ந்தாய்வு செய்வதற்கும், தணிக்கை மற்றும் கணக்குகளை கவனிப்பதற்கும் தனியாக கட்டணங்களை வசூலித்து வருகிறது என்றும், நெடுஞ்சாலைத் துறை, இரயில்வே துறை போன்று TNUDP II திட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு செய்தித்தாளில் விளம்பரம் செய்வதற்கும், வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கும் கட்டணத்தை வசூல் செய்கிறது என்றும், மேலும், களப்பணி அலுவலர்கள் தங்குவதற்கான கட்டிட வாடகையும் வாரியம் வசூல் செய்கிறது என்றும் தெரிவித்துள்ளார். நகராட்சி நிர்வாக இயக்குநர் கீழ்க்குறிப்பிட்டவாறு மேலும் தெரிவித்துள்ளார்:—

அ. ஒரே சீரான நூற்றுவீதக் கட்டணம் அரசால் நிர்ணயம் செய்யப்படாததால் தற்போது பல முகமை நிறுவனங்கள் (Parastatal Agencies) பலதரப்பட்ட நூற்றுவீதக் கட்டணத்தை வசூல் செய்கின்றன. உதாரணமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் (மத்திய அரசு) மேற்கொள்ளப்படும் சில பணிகளுக்கு 18.5%—மும், மற்றும் பாதாள சாக்கடை திட்டங்களுக்கு 5%-மும் நூற்றுவீதக் கட்டணமாக வசூல் செய்கிறது ;

ஆ. அரசாணை (நிலை) எண்.94, ந.நி. (ம) கு.வ. துறை, நாள் 24.06.2005—ல் அமைக்கப்பட்டு 09.10.06—ல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு திட்ட மேலாண்மையில் உதவும் வகையில் TNUDP III ஆல் கூட்டப்பட்ட துணை குழு கூட்டத்தில் திட்ட மேலாண்மை கலந்தாய்விற்கான கட்டணத்தை 5%க்கு குறைவாக நிர்ணயம் செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டு அக்கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்ய முடிவெடுக்கப்பட்டது ;

| திட்ட மதிப்பீடு | திட்ட மேலாண்மை கலந்தாய்வு கட்டணம் |
|---|---|
| அ) 15 கோடி வரையிலான திட்டத்திற்கு | திட்டத்திற்கான மதிப்பீட்டு தொகையில் 2.75% |
| ஆ) 15.00 கோடி முதல் 25.00 கோடி வரையிலான திட்டத்திற்கு | திட்டத்திற்கான மதிப்பீட்டு தொகையில் 2.5% |
| இ) 25 கோடி முதல் 40.00 கோடி வரையிலான திட்டத்திற்கு | திட்டத்திற்கான மதிப்பீட்டு தொகையில் 2.25% |
| ஈ) 40.00 கோடிக்கு மேல் | திட்டத்திற்கான மதிப்பீட்டு தொகையில் 2% |

இ. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு பணியமைப்பு செலவினங்கள் ஏற்பட்டாலும் முகமை நிறுவனங்கள் (Parastatal Agencies) பணிகளை மேற்பார்வையிடும் பணிகளை மட்டுமே செய்து வருவதால் திட்ட செலவின் அடிப்படையில் நூற்றுவீதக் கட்டணம் வசூல் செய்யக்கூடாது என்றும், இது உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் செலவினத்தை ஏற்படுத்தும் என்றும் எனவே ஒரே சீரான நூற்றுவீதக் கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், மூன்றாவது மாநில நிதி ஆணையமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வசூல் செய்யும் 13% நூற்றுவீதக் கட்டணத்தை 5% ஆக குறைக்கலாம் என பரிந்துரைத்துள்ளது என்றும், இப்பரிந்துரையினை அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது என்றும், எனவே அனைத்து பணிகளுக்கான நூற்றுவீதக் கட்டணத்தை 5%–ஆக நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிட வேண்டும்.

**5.** பேரூராட்சிகளின் இயக்குநர் இப்பொருள் குறித்து கருத்து தெரிவிக்கையில், தமிழகத்தில் 561 பேரூராட்சிகள் உள்ளன என்றும், அவற்றில் சென்னை மாநகருடன் ஒட்டியுள்ள பேரூராட்சிகளுக்கான குடிநீர் விநியோக திட்டத்தினை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும், இதர பேரூராட்சிகளுக்கான குடிநீர் விநியோக திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் செயல்படுத்தி வருகின்றன என்றும், இவ்விரண்டு நிறுவனங்களும் வெவ்வேறான நூற்றுவீதக் கட்டணம் வசூல் செய்கின்றன என்றும், அதாவது குடிநீர் விநியோகத் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டத்திற்கும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் 5% நூற்றுவீதக் கட்டணமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு 13% நூற்றுவீதக் கட்டணமும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு 5% நூற்றுவீதக் கட்டணமும் வசூல் செய்கின்றன என்றும், மேற்சொன்ன தொகைகள் பேரூராட்சிகளின் வருவாயிலிருந்தே ஈடுசெய்யப்படுகின்றன என்றும், நிதிச்சுமை அதிகமாக உள்ள பேரூராட்சிகளால் இக்கட்டணத்தை செலுத்துவது கடினமாக உள்ளது என்றும் எனவே, பேரூராட்சிகளுக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தும் அனைத்து பணிகளுக்கான நூற்றுவீதக் கட்டணத்தை 5%–ஆக நிர்ணயம் செய்யலாம் என்றும் மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

**6.** மூன்றாவது மாநில நிதி ஆணையம் (Third State Finance Commission) உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோக திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்திற்கான நூற்றுவீதக் கட்டணம் 5% ஆக நிர்ணயிக்கலாம் என பரிந்துரைத்துள்ளது. இதனை அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் 29.08.2005 அன்று நடைபெற்ற தலைமைச் செயலர் தலைமையிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் மாநில அளவிலான குழு கூட்டத்தில் (State Level Project Sanctioning Committee) மேற்சொன்ன பரிந்துரையை ஏற்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் இப்பொருள் குறித்து மேலே ஒன்பதாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில் கருத்து தெரிவிக்கையில் அரசாணை (நிலை) எண். 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை, நாள் 17.9.2009ல், குறைந்த பட்ச தேவைத்திட்டப் பணிகளுக்காக 13% நூற்று வீதக்கட்டணம் வசூலிக்க அரசு ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது என்றும், ஊதிய குழு நிலுவைத்தொகை, அகவிலைப்படி, ஊக்கத்தொகை மற்றும் நிதிச்சுமை ஆகியவை மேன்மேலும் உயர்ந்து வருவதாலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வரவு மற்றும் செலவுகளுக்கிடையேயான இடைவெளியை ஈடு செய்ய ஏதுவாக (i) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் தற்போது விதிக்கப்பட்டு வரும் நூற்றுவீதக்கட்டணத்தையே தொடர்ந்து வசூலிப்பது அவசியமாகும் அல்லது (ii) நகர்ப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிடம் வசூலிக்கப்படும் நூற்று வீதக் கட்டணத்தை கைவிட்டு வாரிய பணியாளர்களின் நிர்வாகச் செலவினம், ஓய்வூதியம் மற்றும் மற்ற எதிர்கால நிதிச்செலவினம் ஆகியவற்றை அரசே ஏற்பதன் மூலம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திறம்பட செயல்பட உதவலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

8. நூற்றுவீதக் கட்டணம் என்பது பிற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தும் திட்டங்களுக்கு வசூலிக்கும் மேற்பார்வைக் கட்டணமாகும். இதுகுறித்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்தையும் இதர துறைத் தலைவர்களது கருத்தையும் அரசு, மிகவும் கவனமாகவும், விரிவாகவும் ஆய்வு செய்தது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்டம், 1970–ல் உள்ள வழிவகைப்படி தேர்வுநிலை நகராட்சிகள் வரை மட்டுமே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம்தான் பணிகளை மேற்கொள்ள வேண்டும். சிறப்புநிலை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம்தான் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில்லை. இருப்பினும், TNUDP III, KFW, JICA, JNNURM, UIDSSMT போன்ற திட்டங்களின் கீழ் பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் பணிகள் பெரும்பாலானவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமே நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்காக செயலாக்கப்பட்டு வருவதால் வாரியத்தின் வருவாய் பெருகவும் வாய்ப்புள்ளது.

9. மேலும், மூன்றாவது மாநில நிதி ஆணையம் தனது செப்டம்பர் 2006 அறிக்கையில் கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது:-

**“அத்தியாயம் XII**

**பத்தி எண் 61**

(ii)–ல் “ஆயத்த செயற்பாட்டுமுறை (Turn Key)யில் வசூலிக்கப்படும் சென்டேஜ் கட்டணத்தை தற்போதுள்ள 13% லிருந்து 5% ஆக குறைக்க வேண்டும்”

இதனை அரசும் ஏற்றுக்கொண்டு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விவரம் பின்கண்டவாறு (Action taken report) சட்டமன்ற பேரவையில் மே 2007–ல் வைக்கப்பட்டுள்ளது :

| வ. எண். | அத்தி–யாயம் எண். | பத்தி எண். | பரிந்துரைகளின் சுருக்கம் | அரசு எடுத்த முடிவுகள் |
|---|---|---|---|---|
| 287 | XII | 61(ii) | ஆயத்த செயற்பாட்டு முறை (TURN – KEY)யில் வசூலிக்கப்படும் சென்டேஜ் கட்டணத்தை தற்போதுள்ள 13% லிருந்து 5% ஆகக் குறைக்க வேண்டும். | ஏற்கப்பட்டது |

**10.** தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை ஒத்த சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து குடிநீர் விநியோகத் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டகள் ஆகியவற்றிற்கு ஒரே சீராக 5% நூற்றுவீதக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

**11.** நகர்ப்புர உள்ளாட்சிகள் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்குப் பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் உலக வங்கி, ஜெர்மானிய வங்கி மற்றும் ஜப்பான் நிதியமைப்புக்களிடமிருந்து நிதியுதவி பெறும்போது நூற்றுவீதக் கட்டணம் தவிர்த்த ஒப்பந்தக்காரருக்குப் பட்டுவாடா செய்யப்படும் தொகை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதனைத் தமது நிதியிலிருந்தே உள்ளாட்சி அமைப்புகள் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது உள்ளாட்சி அமைப்புக்களின் நிதிநிலைக்கு ஓர் கூடுதல் சுமையாகும்.

**12.** மேற்கண்ட சூழ்நிலைகளில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர்களின் கருத்துக்களை அரசு கவனமாகவும், விரிவாகவும் ஆராய்ந்து கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது :–

i. ஏற்கெனவே, தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III -ன் கீழ் அமைந்த மாநில திட்ட அனுமதிக் குழுவின் முதற்கூட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் ஒப்புக் கொண்டுள்ளவாறும், தமிழ்நாடு மூன்றாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்து அதனை அரசு ஏற்று சட்டப் பேரவையில் வைத்துப் பதிவு செய்துள்ளவாறும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர்ப்புர உள்ளாட்சியமைப்புகளுக்காக செயல்படுத்தும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் நூற்றுவீதக் கட்டணம் ஒரே சீராக 5% என நிர்ணயம் செய்யப்படுகிறது.

ii. இக்கட்டண வீதம், இந்த ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும். மேலும், இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நிர்வாக ஒப்புதல் பெறும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் மேற்கண்ட நூற்றுவீதக் கட்டணம் பொருந்தும்.

iii. குறைந்தபட்ச தேவைக்கான திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்களுக்கு தற்போது விதிக்கப்படும் 13% நூற்றுவீதக் கட்டணமே தொடரும்.

13. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண். 62/FS/P/10 நாள் 7.2.2010–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை.5
மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர் (ம) கழிவு நீரகற்று வாரியம், சென்னை
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை.5
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை.108
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை.18
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை.18 (பெயர் உறையில்)
ஆணையர், ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை.15
தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி (ம) அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், 490/1–2 அண்ணாசாலை, நந்தனம், சென்னை.35
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், சென்னை.17

<u>நகல்</u>
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9 (அனைத்து பிரிவுகள்)
செயலர் அவர்களின் தனிச்செயலர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை.9
நிதி (பிபிஇ/நநி(ம)குவ)த் துறை, சென்னை.9
ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை.9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை.9
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை.9
இருப்பு கோப்பு/உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**